# தமிழ்நாடு மின்ஊழியர் மத்திய அமைப்பு

பதிவு எண் 158/சிபிடி

27, மசூதி தெரு, சேப்பாக்கம், சென்னை 600 005.

email: coteecitu@gmail.com


## வேலைபளு சம்மந்தமாக மத்திய அமைப்பின் மாற்று ஆலோசனை

நாள் : 25.11.2013

பெறுதல்

**தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர்,**

தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் விநியோகக் கழகம்

144, அண்ணா சாலை,

சென்னை 600 002.

மற்றும்

***பேச்சு வார்த்தைக்குழு உறுப்பினர்கள்***

- **இயக்குநர்/நிதி/ டான்ஜெட்கோ**
- **இயக்குநர்/உற்பத்தி/டான்ஜெட்கோ**
- **இயக்குநர்/விநியோகம்/டான்ஜெட்கோ**
- **செயலாளர்/டான்ஜெட்கோ**
- **தலைமைப் பொறியாளர்/பணித் தொகுப்பு/டான்ஜெட்கோ**
- **தலைமை நிதிக்கட்டுப்பாட்டு அலுவலர் (பொது) /டான்ஜெட்கோ**

ஐயா,

**பொருள் : மின்வாரிய ஊழியர்களின் 1.12.2011 முதல் பணிச்சுமை சம்மந்தமாக வாரியம் அளித்த ஆலோசனைகளுக்கு எங்களது ஆலோசனையை முன்வைப்பது - சம்மந்தமாக.**

**பார்வை : கடித எண் 73640/A3/A31/2011-13/Dated 11.11.2013**

பார்வையில் கண்ட வாரிய கடிதத்தில் 1.12.2011 முதல் ஊழியர்களின் பணிச்சுமை சம்மந்தமாக வாரியம் அளித்த ஆலோசனையின் மீது எங்களது கீழ்கண்ட ஆலோசனைகளை பரிசீலனைக்காக முன் வைக்கின்றோம்.

தமிழக மின்சார வாரியம் ஒரு பொதுத்துறை, சேவைத்துறை நிறுவனமாகும். நாளும் மின்சாரத்துறை வளர்ந்து வரும் ஒரு நிறுவனமாகும் அந்த அடிப்படையில் இன்றைய கணக்குப்படி இரண்டு கோடியே நாற்பத்தி மூன்று லட்சம் மின்நுகர்வோர்கள் மின்வாரியத்தின் சேவையை எதிர் நோக்குபவர்களாக உள்ளனர்.

வளர்ந்து வரும் மின்நுகர்வோர்களின் தேவையை பூர்த்தி செய்யக் கூடிய வகையில் மின்வாரியத்தில் பணியாற்றும் பொறியாளர்கள் முதல் பகுதிநேரப் பணியாளர்கள் வரை ஊழியர்களின் பணி இன்றியமையாத ஒன்றாகும்.

மின்வாரிய ஊழியர்களின் சேவையை உறுதிப்படுத்தும் வகையில் தான் பணிப்பங்கீடு ஒப்பந்தங்கள் நடைபெற்று வருகின்றன. பணிச்சுமை சரத்துக்களை முழுமையாக அமல்படுத்துவதன் மூலமே மின்வாரிய ஊழியர்களின் சேவையை உத்தரவாதப்படுத்திட முடியும். மின்வாரியத்தில் மின் நுகர்வோர்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப மின்வாரிய ஊழியர்களின் எண்ணிக்கை உயரவில்லை போதிய ஊழியர்கள் இன்றி அதிகரித்து வரும் மின்வாரிய பணிகளை குறிப்பிட்ட காலத்தில் முடிக்கப்பட வேண்டும் என்ற அழுத்தத்தின் காரணமாக மின்வாரிய ஊழியர்கள் பணியின்போது விபத்துக்கள் ஏற்பட்டு உயிர் இழப்புகள் ஏற்படுவது அன்றாட நிகழ்வுகளாக மாறி உள்ளன.

இந்தப் பின்னணியில் வாரியம் பணிப்பகிர்வு சம்மந்தமக ஏற்படுத்திய முத்தரப்பு ஒப்பந்தத்தை அமல்படுத்தி இருந்தால் சில ஆயிரம் ஊழியர்களை பணிஅமர்த்தி மின்வாரிய பணிகளை செவ்வனே செய்து மக்கள் சேவையை தொடர முடியும்.

தமிழக மின்வாரியம் போட்ட ஒப்பந்தங்களை அமல்படுத்திடாத நிலைமையை தொடர்ந்து கையாண்டு வருகிறது. இந்நிலையை கைவிடுவதன் மூலமாகவே மின்வாரிய பணிகளை செழுமைப்படுத்த முடியும் என்று சொல்லி பணிச்சுமை சம்மந்தமாக தாங்கள் அளித்த ஆலோசனையை முற்றிலும் கைவிடுமாறு சொல்லி எங்களது மாற்று ஆலோசனையாக கீழ்கண்டவைகளை முன்வைக்கிறோம்.

மாற்று ஆலோசனைகள்

1. 18.11.2009 ஆம் ஆண்டு பணிச்சுமை ஒப்பந்தத்தின் அடிப்படையில் 2011, 2012 மற்றும் 2013 ஆம் ஆண்டுகளில் உயர்ந்துள்ள மின்இணைப்புகளின் அடிப்படையில் பதவிகளை அனுமதித்து நிரப்புவது.

   18.11.2009 ஆம் ஆண்டில் போடப்பட்டுள்ள வேலைப்பளு ஒப்பந்தத்தில் எந்தவித மாற்றத்தையும் மின்மாற்றிகள் மின் இணைப்புகள், பிரிவுகளில் செய்யாமல் அதே நிலைமையில் தொடர வேண்டும்.

2. அனைத்து காலிப்பணி இடங்களையும் உடனடியாக நிரப்பிடும் வகையில் நிலுவையில் உள்ள 10,500 மஸ்துார்களுக்கு கள உதவியாளராக பதவி உயர்வும், 4000 ஐடிஐ தொழில் நுட்பம் படித்தவர்களை கள உதவியாளர்களாகவும் விடுபட்டு போன ஒப்பந்த தொழிலாளர்களை அடையாளங்கண்டு கள உதவியாளர்களாக நியமிப்பதன் மூலமும் கள உதவியாளர் காலிபணியிடங்களை உடனடியாக நிரப்பிடுவது.

3. களப்பிரிவு ஊழியர்களின் பதவி உயர்வில் கல்வித் தகுதியை தளர்த்தி பதவி உயர்வு வழங்குவதை தொடர்ந்து அமலாக்கிடுவது.

4. வருவாய் மேற்பார்வையாளர், நிர்வாக மேற்பார்வையாளர், கணக்கு மேற்பார்வையாளர், வணிக ஆய்வாளர், வணிக உதவியாளர் போன்ற உயர்மட்ட காலிபணியிட பதவிகளை பதவி உயர்வின் மூலமாக உடனடியாக நிரப்பிடுவது.

அசசர் இரண்டாம் நிலை, களஉதவியாளர், கள உதவியாளர் மற்றும் மின்அளவி கணக்கு எடுப்பவர் (ஹெல்பர் கம் மீட்டர் ரீடர்) ஆகியோர்களின் பதவி உயர்வுக்கு நிர்ணயிக்கப்பட்ட 5 ஆண்டுகள் இருக்க வேண்டும் என்ற நிபந்தனையை உடனடியாக ரத்து செய்வது.

5. சென்ற ஊதிய உயர்வு ஒப்பந்தத்தின் போது ஏற்றுக் கொண்டபடி அனைத்து பிரிவு அலுவலகங்களுக்கும் சிறப்பு நிலை முகவர் பதவிகளை அனுமதிப்பது.

6. கணக்கீட்டாளர் இரண்டாம் நிலை, கணக்கீட்டாளர் ஆகியோர்கள் அப்பதவிகளுக்கு இணையான மாற்றுப் பதவிகளுக்கு செல்வதை அனுமதிப்பது கணக்கீட்டாளர்கள் உள்முகத் தேர்வு மூலம் இதர பதவிகளுக்கு தேர்வு செய்ய வாய்ப்பளிப்பது.

7. கம்பியாளரிலிருந்து வணிக உதவியாளர், மின்பாதை ஆய்வாளரிலிருந்து வணிக ஆய்வாளர் போன்றவர்கள் இப்பதவிகளுக்குள் பதவி மாற்றம் செய்ய (Cadre Conversion) அனுமதிப்பது.

8. திட்டம்விட்டு வேறு திட்டத்திற்கு ஊர்மாற்றம் வழங்கும் போது களப்பிரிவு ஊழியர்களுக்கு ஏற்கனவே பணியாற்றிய திட்டத்தில் ஊர்மாற்றத்திற்கு முன்பு பணியாற்றிய காலத்தையும் கணக்கில் கொண்டு தேர்வு நிலை வழங்கிட வேண்டும்.

9. ஒரே சம்பள விகிதத்தில் உள்ள பதவிகளில் பதவி மாற்றம் பெறும் போது இரு பதவிகளிலும் பணியாற்றிய காலத்தை கணக்கில் கொண்டு தேர்வு நிலையும் சிறப்பு நிலையும் வழங்குவது.

10. மஸ்தூர், அஸஸர் கிரேடு 2, ஹெல்பர் கம் மீட்டர் ரீடர் -களில் பயிற்சியாளர் போன்ற நிலைகளை முற்றிலுமாக அகற்றி களப்பிரிவிலும், கணக்கீட்டு பிரிவிலும் ஆரம்ப கட்ட பதவிகளை கள உதவியாளர், கணக்கீட்டாளர் என நிர்ணயிப்பது.

11. மாநில அரசு அளித்துள்ள தாழ்த்தப்பட்ட, பழங்குடி, மிகவும் பிற்படுத்தப்பட்டவர்களுக்கும், மாற்றுத் திறனாளி களுக்கும், அருந்ததியருக்கும் மற்றும் சிறுபான்மை யினருக்கும் ஒதுக்கப்பட்ட இட ஒதுக்கீட்டை முழுமையாக அமல்படுத்துவது.

12. பதவிஉயர்வில் இட ஒதுக்கீட்டிற்காக பிறப்பித்த அரசாணை 91ஐ முழுமையாக அமல்படுத்துவது.

13. கணக்கீட்டுப்பிரிவு ஊழியர்களுக்கு உயர்த்த உத்தேசித்துள்ள வேலைபளுவை முழுமையாக கைவிடுவது.

14. கணக்கீட்டுப் பிரிவு ஊழியர்களின் பதவிஉயர்வுக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ள தேவையற்ற நிபந்தனைகளை அகற்றிட வேண்டும்.

15. கணக்கீட்டு பிரிவு ஊழியர்களுக்கு பதவி உயர்வு வாய்ப்பை உருவாக்கும் வகையில் உப கோட்டத்திற்கு ஒரு மதிப்பீட்டு அலுவலர் (ATO) பதவியை அனுமதிப்பது.

உபகோட்ட அளவில் ஒரு கணக்கீட்டாளரை LEAVE RESERVE -வாக அனுமதிப்பது.

16. கணக்கீட்டுப் பிரிவு ஊழியர்களின் பதவி உயர்வு வாய்ப்பை உருவாக்கும் வகையில் மத்திய அலுவலகத்தில் சிறப்பு

நிலை கணக்கீட்டு அலுவலர், மண்டல தலைமை பொறியாளர் அலுவலகத்தில் முதன்மை கணக்கீட்டு அலுவலர் பதவியையும் புதியதாக உருவாக்கிட வேண்டும்.

17. ஒரு பிரிவு அலுவலகத்திற்கு குறைந்தபட்சம் இரு கணக்கீட்டாளர்கள், ஒரு கணக்கீட்டு ஆய்வாளர், ஒரு வருவாய் மேற்பார்வையாளர் ஆகிய பதவிகளை இருக்கச் செய்வது கணக்கீட்டுப்பிரிவு ஊழியர்களுக்கு செயல்படும் கனிணி மற்றும் எழுது பொருள், கனிணி பராமரிப்பு பொருள்கள் முழுமையாக வழங்கிட வேண்டும்.

18. நிர்வாகப் பிரிவில் ீபதவி உயர்வு வாய்ப்புகளை உருவாக்கும் வகையில் திட்டமட்டத்தில் ஒரு நிர்வாக அதிகாரி பதவியும், அனல் மின்நிலையத்தில் உள்ள தலைமைப் பொறியாளர்க்கு அளித்ததை போல அனைத்து தலைமைப் பொறியாளர் அலுவலகத்திற்கும் ஒரு தலைமை நிர்வாக அலுவலர் பதவியையும் அனுமதித்திட வேண்டும்.

19. 110 கிலோவாட் துணை மின் நிலையங்கள் (Non Grid) 4 இளநிலைபொறியாளர் 2ம் நிலையும், 4 மின்பாதை ஆய்வாளர் பதவிகளையும் அனுமதித்திட வேண்டும்.

20. லைன்ஸ் பிரிவில் குறைக்கப்பட்ட கள உதவியாளர், கம்பியாளர் ஆகிய இரண்டு பதவிகளையும், வணிக உதவியாளர் ஒரு பதவியையும் தொடர்ந்து அனுமதித்திடுவது.

21. எம்.ஆர்.டி. பிரிவில் குறைக்க உத்தேசித்துள்ள இரு வாகன ஓட்டுநர் பதவியையும் ஒரு வணிக உதவியாளர் பதவியையும் தொடர்ந்து வழங்கிட வேண்டும்.

22. கட்டுமான பிரிவில் குறைக்க ஆலோசித்துள்ள முகவர் இரண்டாம் நிலை ஒரு பதவியை தொடர்ந்து அனுமதித்திட வேண்டும்.

23. ஊழியர்கள் இல்லாத துணை மின்நிலையங்களை பராமரிப்பதற்கு 33 கே.வி. துணை மின் நிலையங்களுக்கு பதவிகள் அனுமதிபபதைப் போல மின்பாதை ஆய்வாளர் பதவியை அனுமதித்திட வேண்டும்.

24. திட்டத்தில் 33 கே.வி./ 11 கே.வி. / 230 கே.வி. ஆகிய 25 துணை மின்நிலையங்களுக்கு மேல் உள்ள திட்டங்களுக்கு கூடுதலாக ஒரு சிறப்பு பராமரிப்பு பிரிவும், ஒரு எம்.ஆர்.டி. பிரிவும் அனுமதிக்கப்பட வேண்டும்.

25. 110 கே.வி. துணை மின்நிலையங்களுக்கு உதவிப்பொறியாளர் /பராமரிப்பு பதவியை அனுமதித்திட வேண்டும்.

26. மின்வாரியத்தில் உள்ள 33/11 கே.வி. (Indoor) துணை மின்நிலையத்திற்கு ஆப்ரேட்டர்கள் TA/LI என நான்கு பதவிகளை அனுமதித்திடுவது.

27. மின்வாரியத்தில் உள்ள அனைத்து பிரிவு அலுவலகங்களுக்கும் ஏற்கனவே உள்ள ஒரு மின்பாதை ஆய்வாளர் பதவியோடு மேலும் கேபிள் ஜாயின்டர் (Cable Jointer / LI) என்ற பதவியையும் சேர்த்து அளிக்க கோருவது.

28. மின்வாரிய செயலகப்பிரிவிற்கும், நிர்வாகப்பிரிவிற்கும், நிர்வாகப் பிரிவு மற்றும் தணிக்கைப் பிரிவில் உள்ளதைப் போல சீனியர் பிரிவு அலுவலர் பதவியை அனுமதித்திட வேண்டும்.

29. **தலைமை அலுவலகத்தில் பணியாற்றும் லிப்ட் ஆப் ரேட்டர்களுக்கு பதவி உயர்வு வாய்ப்பே இல்லாத நிலையில் சீனியர் லிப்ட் ஆப் ரேட்டர்களுக்கு களப்பிரிவில் அடுத்த பதவிஉயர்வுக்கான பதவிக்கு உயர்த்துவதைப் போல லிப்ட் ஆப்ரேட்டர்களையும் அப்கிரேடு (முகவர் முதல் நிலை) செய்வது. அதாவது போர்மென் பதவிக்கு இணையான பதவியை உருவாக்குவது.**

30. **மின்வாரிய தலைமை அலுவலகத்தில் உள்ள தனிச் செயலர்களுக்கு, துணைச் செயலர், இணைச்செயலர் என்ற பதவி உயர்வு வாய்ப்புகளை உருவாக்குவது.**

தங்கள் உண்மையுள்ள

**(எஸ். எஸ். சுப்பிரமணியன்)**
பொதுச்செயலாளர்

# தமிழ்நாடு மின்ஊழியர் மத்திய அமைப்பு

பதிவு எண் 158/சிபிடி

27, மசூதி தெரு, சேப்பாக்கம், சென்னை 600 005.

email: coteecitu@gmail.com


## ஊதிய உயர்வு சம்மந்தமாக மத்திய அமைப்பின் மாற்று ஆலோசனை

பெறுதல்

நாள் : 25.11.2013

**தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர்,**
தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் விநியோகக் கழகம்
144, அண்ணா சாலை,
சென்னை 600 002.

மற்றும்

***ஊதிய உயர்வு பேச்சு வார்த்தைக்குழு உறுப்பினர்கள்***

- **இயக்குநர்/நிதி/ டான்ஜெட்கோ**
- **இயக்குநர்/உற்பத்தி/டான்ஜெட்கோ**
- **இயக்குநர்/விநியோகம்/டான்ஜெட்கோ**
- **செயலாளர்/டான்ஜெட்கோ**
- **தலைமைப் பொறியாளர்/பணித் தொகுப்பு/டான்ஜெட்கோ**
- **தலைமை நிதிக்கட்டுப்பாட்டு அலுவலர் (பொது) /டான்ஜெட்கோ**

ஐயா,

**பொருள் : மின்வாரிய ஊழியர்களுக்கு 1.12.2011 முதல் வழங்க வேண்டிய ஊதிய உயர்வுக்காக 14.11.2013 அன்று வாரியம் வழங்கிய ஆலோசனையின் மீது முன்வைக்கப்படும் எங்களது சங்கத்தின் கருத்துக்களை பரிசீலிக்க வேண்டுவது – சம்மந்தமாக.**

தமிழக மின்வாரியத்தில் பணியாற்றும் மின்வாரிய ஊழியர்களுக்கு 1.12.2011 முதல் வழங்க வேண்டிய ஊதிய உயர்வுக்கான பேச்சு வார்த்தை நடைபெற்று வருகின்றது. அதன் ஒரு கட்டமாக 14.11.2013 அன்று பேச்சு வார்த்தை நடைபெற்றுள்ளது. அப்பேச்சு வார்த்தையை வேகப்படுத்தி வெகு விரையில் நிறைவுக்கு கொண்டு வர வேண்டுமென கேட்டுக் கொள்கிறோம்.

தமிழக மின்வாரியத்தை எதிர்நோக்கியுள்ள இரண்டு கோடியே நாற்பது லட்சம் மின்நுகர்வோர்களின் நலன்கள் மின்வாரியத்தில் பணியாற்றும் சுமார் 80,000 ஊழியர்களின் அரிய சேவையினால் பாதுகாக்கப்பட்டு வருகிறது என்பதை தங்களின் கவனத்திற்கு கொண்டு வர விரும்புகிறோம்.

சமீப ஆண்டுகளில் தமிழக மக்களுக்கு தேவையான மின்சாரத்தின் அளவில் பற்றாக்குறை நிலவிய போதும் மின்வாரியத்தில் பணியாற்றும் குறைந்தபட்ச ஊழியர்களின் அயராத உழைப்பினால் கிடைக்கின்ற மின்சாரத்தை முறையாக விநியோகிக்கின்ற பணிகள் நடைபெற்று வருகிறது என்பதையும் தங்களின் கவனத்திற்கு கொண்டு வர விரும்புகிறோம். மின்வாரியம் துவங்கியதிலிருந்து இன்று வரை சிற்சில சம்பவங்களை தவிர்த்து பொதுவாக தொழில் அமைதிகாத்து, மக்கள் சேவையை தொடர்ந்து வருகிறது என்பதையும் தங்களின் நினைவுக்கு கொண்டு வர விரும்புகிறோம்.

தற்போதுள்ள மின்வாரிய நிர்வாகமும் தொழிலாளர்களின் வலியறிந்து நிவாரணம் காணும் நடவடிக்கையில் ஈடுபட்டு வருகிறது என்பதையும் தொழிலாளர்களால் புரிந்து கொள்ள முடிகிறது. இச் சூழ்நிலையை கணக்கில் கொண்டு மின்வாரிய ஊழியர்களின் ஊதிய உயர்வு பேச்சு வார்த்தையை நடத்தி நிறைவுக்கு கொண்டு வர வேண்டுமென கேட்டுக் கொள்கிறோம்.

தமிழக மின்சார வாரியத்தில் பணிப்பங்கீடு அடிப்படையில் அனுமதிக்கப்பட்ட பதவிகள் 1,33,358 என்றும் அதில் 81,938 பணியாளர்கள் பணியாற்றுவதாகவும் இவைகளின்ன அடிப்படையில் காலிபணியிடங்கள் 51,420 என்றும் வாரியம் தந்த புள்ளி விவரங்களின் அடிப்படையில் 50,000-க்கும் மேற்பட்ட காலி பணியிடங்களில் ஏற்கனவே மின்வாரியத்தில் பணியாற்றும் பணியாளர்கள் பணிச்சுமையை சுமந்து பணியாற்றுகிறார்கள். இதனால் வாரியத்திற்கு பல கோடி ரூபாய் ஆகும் செலவு மிச்சப்படுத்தப்பட்டிருக்கிறது என்பதையும் தங்களின் கவனத்திற்கு கொண்டு வரவிரும்புகிறோம்.

மின்வாரிய ஊழியர்களுக்கு 2009 ஆம் ஆண்டில் ஏற்பட்ட ஊதிய உயர்வு ஒப்பந்தத்தில் 40 சதவீத ஊதிய உயர்வும், குறைந்த பட்ச பணப்பயனாக ரூபாய் 1500/-ம் ஏற்கனவே இருந்த அனைத்து அலவன்சுகளும் இரட்டிப்பாக மாற்றி அளிக்கப்பட்டுள்ளது. மேலும் 2005ம் ஆண்டில் ஏற்பட்ட ஊதிய உயர்வு ஒப்பந்தத்திலும் 6 சதவீதம் அடிப்படை ஊதியத்தில் ஊதிய உயர்வும், குறைந்த பட்ச பணப்பயனாக ரூபாய் 600/-ம் அளிக்கப்பட்டுள்ளது என்பதை தெரிவித்துக் கொள்கிறோம்.

மின்வாரிய ஊழியர்களுக்கு இப்போது அளிக்கும் உயர்வினைக் கொண்டே 2015 ஆம் ஆண்டு வரையில் விலைவாசி உள்ளிட்ட மாறுதல்களை எதிர்கொள்ள வேண்டியுள்ளது என்பதையும் தங்களின் கவனத்திற்கு கொண்டு வருவதோடு இந்நிலையில் 14.11.2013 அன்று ஊதிய உயர்வு பேச்சு வார்த்தைக்காக தாங்கள் அளித்த ஆலோசனையில் கீழ்கண்ட மாற்றங்களை முன்வைத்து பேச்சு வார்த்தை நடத்தி ஒப்பந்தம் காணுவதே பொருத்தமாயிருக்கும் என்பதை தெரிவித்துக் கொள்கின்றோம்.

**மாற்று ஆலோசனைகள்**

1. மின்வாரியம் அளித்த ஆலோசனையான அடிப்படைச் சம்பளமும், கிரேடுபே-வும் இணைந்து 5 சதவீத உயர்வு என்ற ஆலோசனையை ஏற்க இயலாது. அதை கணிசமான அளவிற்கு உயர்த்தி தர வேண்டும்.

2. குறைந்தபட்ச உயர்வு ரூ. 500/- என்பதை ரூபாய் 1500/- ஆக உயர்த்திட வேண்டும்.

3. சம்பள விகிதம், கிரேடுபே போன்றவைகள் மாற்றி அமைக்கப்பட வேண்டும். தற்போது வழங்கப்பட்டுள்ள ஆலோசனைகளில் அதிகாரிகளுக்கான இறுதி நிலை அடிப்படைச் சம்பளத்தை 5 நிலைகளாக உள்ளதை 8 நிலைகளாக மாற்ற வேண்டும்.

4. தாங்கள் அளித்த ஆலோசனையில் 15 ஆண்டு காலம் பணி முடித்தவர்களுக்கு ஒரு ஆண்டு உயர்வு அதாவது அடிப்படைச் சம்பளம், கிரேடு பே-வில் 3 சதவீதம் உயர்த்தி தருவது. இதில் 15 ஆண்டு காலம் என நிர்ணயிக்கிற போது ஒப்பந்தத்தின் பலனான குறைந்தபட்ச பணப்பயன் மட்டுமே சுமார் 40,000 ஊழியர்களுக்கு கிடைத்திடும் என்பதை குறிப்பிட்டு, அதனால் சர்வீஸ் வெயிட்டேஜ் 7 ஆண்டுகளுக்கு ஒரு ஆண்டு உயர்வும், 14 ஆண்டுகளுக்கு இரண்டு ஆண்டு உயர்வும், 21 ஆண்டுகளுக்கு 3 ஆண்டு உயர்வும் என்று மாற்றி அமைத்திட வேண்டும்.

   சர்வீஸ் வெயிட்டேஜ் கணக்கிட, தினக்கூலி, ஒப்பந்த தொழிலாளியாக பணியாற்றி காலத்தை முழுமையாக எடுத்துக் கொள்ள வேண்டும்.

5. ஆறாவது ஊதியக் குழு அடிப்படையில் தமிழக அரசால், அரசு ஊழியர்களுக்கு ஒரு நபர் குழுவின் பரிந்துரையை அமலாக்கியதன் அடிப்படையில் மின்வாரிய பொறியாளர்களுக்கும், ஊழியர்களுக்கும், அதிகாரி களுக்கும் கிரேடுபே, தேர்வு நிலை 6 சதவீதம் போன்றவைகளை மாற்றி அமைத்திட வேண்டும்.

6. பயிற்சி காலம் முழுமையாக அகற்றப்பட வேண்டும்.

7. மொத்த பணிக்காலத்தில் 3 பதவி உயர்வு என்பதை உறுதிப்படுத்தும் வகையில் 27 ஆண்டு காலம் பணிமுடித்தவர்களுக்கு அந்த பணித்தொகுப்பு காலத்தில் 3வது பதவி உயர்வுக்கான ஊதியத்தை வழங்கிட வேண்டும்.

8. மின்வாரியத்தில் பணியாற்றும் ஒப்பந்த ஊழியர்களுக்கு வழங்கப்படும் தினக்கூலியை குறைந்தபட்சம் ரூபாய் 540/-ஆக உயர்த்தி வழங்கிட வேண்டும்.

மின்வாரியத்தில் பணியாற்றும் மீதமுள்ள ஒப்பந்த தொழிலாளர்களை அடையாளங்கண்டு பணிநிரந்தரம் செய்திட வேண்டும்.

9. மின்வாரியத்தில் பணியாற்றும் பகுதிநேர ஊழியர்களுக்கு 1.9.2006 முதல் அவர்களின் ஊதியம் அரசு சத்துணவு ஊழியர்களுக்கு மாற்றி அமைத்ததைப் போல் ரூ. 1300 - 20 - 1500 - 25 - 2000 என்று மாற்றி அமைக்கப்பட வேண்டும். ஒப்பந்தத்தின் பலனும் அளித்திட வேண்டும்.

மேலும் 1.4.2005 முதல் தனி ஊதியம் (சிறப்பு ஊதியம்) ரூ. 200/- வழங்கியதைப் போல இவர்களுக்கு வழங்கிடவும், மருத்துவப்படி சலவைப்படி போன்றவைகள் 1.4.2005 முதல் வழங்கியதைப் போல ரூ. 360/- என மின்வாரிய பகுதி நேர ஊழியர்களுக்கும் வழங்கப்பட வேண்டும்.

கல்வித் தகுதியுடைய பகுதி நேர ஊழியர்களுக்கு உள்முகத் தேர்வுக்கான வாய்ப்பை உருவாக்கிட வேண்டும்.

10. மின்வாரிய ஊழியர்களுக்கு இலவச மின்சாரம் வழங்கிட வேண்டும்.

11. ஒப்பந்த காலம் 4 ஆண்டாக தொடர வேண்டும்.

12. ஆண்டுயர்வு 3 சதவீதம் என்பது 5 சதவீதமாக மாற்றி அமைக்கப்பட வேண்டும்.

13. 1.09.2009க்கு பிறகும் பணியில் சேர்ந்தவர்களுக்கு பழைய அலவன்ஸ் மற்றும் இன்சென்டிவ் வழங்கப்படுவதை மாற்றி 1.09.2009-க்கு முன் பணியில் சேர்ந்தவர்களுக்கு வழங்கப்படுவதை போல இரட்டிப்பாக வழங்க வேண்டும்.

14. புதிய சம்பள பொருத்தம் அடிப்படையில் வீட்டு வாடகைப்படி, நகர ஈட்டுப்படி, ஸ்பெஷல் ஊதியம் மற்றும் இதர படிகள் மாற்றி அமைத்திட வேண்டும்.

15. மருத்துவ அலவன்ஸ் மாதம் ரூ. 500/- ஆக உயர்த்தித் தர வேண்டும்.

16. மருத்துவ செலவை திரும்ப பெறும் திட்டத்தில் மின்வாரிய ஊழியர்களுக்கு புதியதாக அமைய உள்ள ஊதிய உயர்வின் அடிப்படைச் சம்பளத்தில் முழுமையாக திரும்ப பெறும் வகையில் மாற்றி அமைத்திட வேண்டும்.

மருத்துவ அலவன்ஸ் பெறும் மின்வாரிய ஊழியர்கள் மருத்துவ செலவை திரும்ப பெறும் ( MRI திட்டம்) விருப்பம் தெரிவிக்கவும் 1995 ஆம் ஆண்டின் அடிப்படைச் சம்பள அளவுகோலிலும் மாறுதல் அளிக்க வேண்டும், அதே போல் மருத்துவ செலவை திரும்ப பெறும் திட்டத்தில் உள்ளவர்கள் மருத்துவ அலவன்ஸ்-ஐ திரும்ப பெறும் வாய்ப்பை அளிக்க வேண்டும்.

17. உதவி பொறியாளர், இளநிலை பொறியாளர், கணக்கீட்டாளர் மற்றும் கள உதவியாளர், கம்பியாளர், வணிக உதவியாளர், வணிக ஆய்வாளர், கணக்கீட்டு ஆய்வாளர், வருவாய் மேற்பார்வையாளர், மின்பாதை ஆய்வாளர், முகவர் போன்றவர்களுக்கு பெட்ரோல் அலவன்சாக மாதம் ரூ. 1500/- வழங்கப்பட வேண்டும்.

18. மின்வாரியத்தில் பணியாற்றும் ஊழியர்களுக்கு முன்னுரிமை அடிப்படையில் நிலம் இருப்பவர்களுக்கு ஒரு விவசாய இணைப்பு வழங்கும் வாய்ப்பை மீண்டும் வழங்கிட வேண்டும்.

19. ஊதிய உயர்வுக்கு மறு விருப்பம் (Revised Option) தரும் வாய்ப்பை அளிக்க வேண்டும்.

20. சுற்றுலா பயணச் சலுகையாக (LTC) நான்கு ஆண்டுகளுக்கு ஒரு முறை ரூபாய் 20,000/-த்தை ரொக்கமாக வழங்கிட வேண்டும்.

21. 1.12.2011ல் வழங்க உள்ள ஊதிய உயர்வுக்கு 30.09.2011ல் வாங்கும் ஊதியத்தின் அடிப்படையில் ஊதிய உயர்வுக்கு விருப்பம் தெரிவிக்கும் வாய்ப்பினை உருவாக்கிட வேண்டும்.

22. மின்வாரிய தலைமை அலுவலக செயலாகப் பிரிவில் உள்ள பிரிவு அலுவலர், உதவி பிரிவு அலுவலர் பதவிகளுக்கு அரசு செயலகப் பிரிவில் உள்ள பிரிவு அலுவலர்களுக்கு வழங்கும் பே-பாண்ட், கிரேட்-பே வழங்கிட வேண்டும்.

23. மின்வாரிய தணிக்கைப்பிரிவில் பணியாற்றும் தணிக்கையாளர்களின் பே, மற்றும் கிரேட்பே போன்றவைகளை அரசு பிரிவில் உள்ள தணிக்கையாளர்களுக்கு உரிய பே மற்றும் கிரேட் பே-வை வழங்கிட வேண்டும்.

24. செயலகப் பிரிவில் பணியாற்றும் அலுவலக உதவியாளர்/ டபேதார் இளநிலை உதவியாளர் சம்பளத்தைப் பெறும் இவர்களுக்கு பதவி உயர்வு வாய்ப்பே இல்லாது பணியாற்றுவதால் நிர்வாக உதவியாளருக்கு உள்ள ஊதியத்தை வழங்கிட வேண்டும்.

தங்கள் உண்மையுள்ள

(எஸ். எஸ். சுப்பிரமணியன்)
பொதுச்செயலாளர்